# கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(08.12.2016 முதல் 12.12.2016 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


==========================================================================

தேதி:07.12.16

## கடந்த 5 நாட்களில் நிலவிய வானிலை (02.12.2016– 06.12.2016)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 32.3 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 23 – 32 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 19 – 23 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3 – 8 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 44 – 96 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 – 13 |

## அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 08.12.2016 | நாள் 2 09.12.2016 | நாள் 2 10.12.2016 | நாள் 4 11.12.2016 | நாள் 5 12.12.2016 |
| மழை (மி.மீ.) | 0.5 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 21 | 21 | 21 | 21 | 21 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 60 – 75 | 60 – 75 | 60 – 75 | 60 – 75 | 60 – 75 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

08.12.2016 முதல் 12.12.2016 வரை வானம் சற்று மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 0.5 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், உளுந்து, எள், கரும்பு மற்றும் பருத்தி**

**பருவம்˙:சம்பா : இளம் பயிர்**

- மழை நீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்
- தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைகருகல் நோய் மற்றும் இலை கீறல் நோய்கள் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 20 சத பசுஞ்சாணக் கரைசலை நோய் அறிகுறி தென்பட்ட உடன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும் (40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்) அல்லது காப்பர் ஹைட்ராக்ஸ்சைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்
- சம்பா நெற்பயிரில் புகையான் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நெல்வயலில் பட்டம் பிரித்து தண்ணீர் வடித்து காற்றோட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் புகையான் தாக்குதலலிருந்து பயிர்களை பாதுகாக்கலாம். இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 40 கிராம் தயோமித்தாக்சாம் அல்லது ஃபுப்ரோபைசின் 25 எஸ்.சி. 320 மில்லி/ஏக்கர் என்ற மருந்தினை தூர் பகுதி நன்கு நனையும்படி தெளிக்கவும்.

ஒம்/- வெ. இரவி.

இயக்குநர்

/உண்மை நகல்/

பேராசிரியர்(உழவியல்)